6th March 1958]

SRI K. ANBAZHAGAN : தேசிய தண்ணீர் வழங்கும் திட்டத்தி லிருந்து உதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் அவற்றை செலவு செய்து நிறை வேற்ருமல் இருப்பதற்கு காரணம் இவைகளைப்பற்றி திட்டம் போடாமல் இருந்து வருகிறதா ? அல்லது திட்டமிட்டதை அரசாங்க யந்திரங்கள் சரியாக நிறைவேற்ருமல் இருக்கிருர்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமைச் சேர்ந்தது. ரூரல் வாட்டர் ஸப்ளை ஸ்கீம் வேறு, தேசிய வாட்டர் ஸப்ளை ஸ்கீம் வேறு.

* 218 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of drinking-water wells dug by the Government from 1947 to 1957 in the Kadambuliyur Firka, South Arcot district;

(b) the amount spent thereon; and

(c) the number of wells not in use?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Thirty-nine.

(b) Rupees 85,142.

(c) Nine.

SRI A. GOVINDASAMY : இந்த காடாம்புலியூர் பகுதியில் உள்ள கிணறுகளில் சூரிய வெளிச்சம் சரியாக படுவதில்லை. அதன் காரணமாகத்தான் அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் குடிதண்ணீருக்கு உபயோகப்படுவதில்லையாதலால் குழாய் கிணறுகள் மூலம் குடித்தண்ணீர் வசதி செய்து கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் அடுத்த கேள்விக்கும் சேர்த்து பதிலை சொல்லலாம். அதன் பின் உப கேள்விகள் கேட்கலாம்.

* 219 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state —

(a) whether there is any proposal to provide protected water-supply to Kadambuliyur Firka, South Arcot district from the river Gadilam;

(b) if so, when it will be given effect to; and

(c) the expenditure to be incurred thereby?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) A report from the Inspector of Municipal Councils and Local Boards regarding the ability and the willingness of the Local bodies concerned to meet the cost of the maintenance of the scheme is awaited.

(c) The approximate cost of the scheme is Rs. 22·8 lakhs to instal and Rs. 34,500 to maintain per annum.

SRI A. GOVINDASAMY : என்னுடைய கேள்விக்குப் பதிலளிக்கப் படவில்லை.

MR. SPEAKER : உங்கள் கேள்வியை திருப்பிக்கேளுங்கள்.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதியில் குழாய் கிணறு கள் மூலமாக தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டமிடுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக ஒரு திட்டம் தயாரித்து அதையும் சேர்த்து ஒரு காம்ப்ரஹன்ஸீவ் திட்டமாக கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. சில இடங்களில் கிணறுகள் வெட்டும்போது நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. சில இடங்களில்தான் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. கூடிய வரையில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு; வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

Government have sanctioned the proposal of the Collector of South Arcot for the provision of a bore-well with a overhead tank and alum treatment plant for the supply of protected water to the villages of Kadambuliyur, Purangudi and Melambattu.

SRI K. ANBAZHAGAN: காடாம்புலியூர் பகுதியில் தேசீய தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் நல்ல சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு திட்டம் இருப்பதாக சொல்லப்பட்டது. அந்த திட்டத்திற்கு தேசீய தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கத்திலிருந்து தேவையான பணத்தைப் பெற முயற்சிப்பீர்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப்பற்றி ஆராய வேண்டும். அதை ஆராய்ந்து பார்க்கிறேன்.

SRI A. GOVINDASAMY : எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கனம் ராமசாமி படையாச்சி அவர்கள் மந்திரியாக இருந்த சமயத்தில் அந்தப் பகுதியில் இந்த திட்டத்திற்காக 30 லட்சம் ரூபாய் செலவு செய்து தண்ணீர் வழங்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. இப்பொழுது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னும் அது ஏன் நடைபெறுமல் இருக்கிறது. அது எப்போது நடைமுறைக்கு வரும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையில் அந்த மந்திரியை இழுக்க வேண்டிய அவசியமில்லை. அரசாங்கம் இதைப் பற்றி கவனிக்கும்.

Nationalization of Bus services

* 220 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the
1-20 p.m. Minister for Industries be pleased to state—

(*a*) whether there is a proposal to extend the nationalization of bus services; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*)—

	Route.	Minimum number of buses to be run.
1	Madras (Mint) to Tiruvothiyur (Route No. 56)	13
2	Madras (Mint) to Ennore (Route No. 56-A).	3
3	Madras (Mint) to Red Hills (Route No. 57).	4
4	Madras (Broadway) to Lattice Bridge (Route No. 19)	4
5	Madras (Parry's and Broadway) to Villivakkam (Route No. 20)	10

SRI N. K. PALANISAMI : ஸார், சென்னை நகரத்தின் சுற்றுப் புரங்களில் பஸ்களை தேசீய மயமாக்குவதை விஸ்தரிப்பதைவிட, பாக்கி